**கிராமின் கிருஷி மவுசம் சேவா**

இந்திய வானிலை துறை

தமிழ்நாடு வேளாண் பல்கலைக்கழகம்

கோவை, தமிழ்நாடு

# அக்ரோமெட் ஆலோசனை புல்லட்டின்

**தேதி : 17-02-2023**

**வேலூர்(தமிழ்நாடு) வானிலை முன்னறிவிப்பு - அன்று வெளியிடப்பட்ட :2023-02-17 ( அடுத்த 5 நாட்களில் 8:30 IST வரை செல்லுபடியாகும்)**

| வானிலை காரணி | 2023-02-18 | 2023-02-19 | 2023-02-20 | 2023-02-21 | 2023-02-22 |
|---|---|---|---|---|---|
| மழையளவு (மி.மீ ) | 0.0 | 0.0 | 0.0 | 0.0 | 0.0 |
| அதிக பட்ச வெப்பநிலை ( oசெ ) | 33.0 | 33.0 | 34.0 | 34.0 | 35.0 |
| குறைந்த பட்ச வெப்பநிலை (o செ ) | 18.0 | 19.0 | 19.0 | 20.0 | 20.0 |
| அதிக பட்ச காற்றின் ஈரப்பதம் (%) | 90 | 90 | 90 | 80 | 80 |
| குறைந்த பட்ச காற்றின் ஈரப்பதம் (%) | 30 | 30 | 30 | 20 | 20 |
| காற்றின் வேகம் (கி.மீ./மணி ) | 4.0 | 4.0 | 4.0 | 8.0 | 8.0 |
| காற்றின் திசை (கோணம்) | 70 | 90 | 70 | 50 | 50 |
| மேக மூட்டம் (ஆக்டா) | 0 | 0 | 0 | 0 | 0 |

## வானிலை சுருக்கம் / எச்சரிக்கை:

பிப்ரவரி 18,19,20,21,22 தேதிகளில் வறண்ட வானிலை நிலவ வாய்ப்புள்ளது. அதிகபட்ச வெப்பநிலை 33-35 டிகிரி செல்சியஸ் ஆகவும் குறைந்தபட்ச வெப்பநிலை 18-20 டிகிரி செல்சியஸ் ஆகவும் பதிவாக வாய்ப்புள்ளது. காலைநேர காற்றின் ஈரப்பதம் 80-90 % ஆகவும், மாலைநேர காற்றின் ஈரப்பதம் 20-30 % ஆகவும் பதிவாக வாய்ப்புள்ளது. காற்றின் வேகமானது மணிக்கு 4-8 கி.மீ வரை வடகிழக்கு திசையிலிருந்து வீசக்கூடும்.

## பொது ஆலோசனை:

தமிழ்நாடு மற்றும் புதுச்சேரியை பொறுத்த வரையில் பிப்ரவரி 24 முதல் 25 மார்ச் வரை இயல்பான மழை மற்றும் வெப்பநிலை காணப்பட வாய்ப்புள்ளது. தற்பொழுது நிலவும் சூழ்நிலை காரணமாக பயிர்களில் பூச்சி மற்றும் நோய் தாக்கம் ஏற்பட வாய்ப்புள்ளது. எனவே வயலை அவ்வப்பொழுது கண்காணித்து தாக்கம் தென்பட்டால் அதற்கேற்ப பயிர் பாதுகாப்பு நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும்.

## குறுஞ்செய்தி :

| |
|---|
| வரும் நாட்களில் வறண்ட வானிலை எதிர்பார்க்கப்படுவதால் மண்ணின் ஈரத்தன்மையை பொறுத்து, பயிர் வகைகளுக்கேற்ப நீர் பாய்ச்ச வேண்டும். |

## பயிர் குறிப்பிட்ட ஆலோசனை:

| பயிர் | பயிர் குறிப்பிட்ட ஆலோசனை |
|---|---|
| நெல் | நெல் நாற்றங்காலில் இலை புள்ளி மற்றும் குலை நோயை கட்டுப்படுத்த சாப் ( கார்பென்டாசிம் 12% + மான்கோசெப் 63%) @ 2கிராம் ஒரு லிட்டர் தண்ணீர் கலந்து தெளிக்கவேண்டும். இலை சுருட்டு புழுவை கட்டுப்படுத்த குளோரான்ட்ரானிலிப்ரோல் 18.5% sc @ 6 மி.லி / 10 லிட்டர் தண்ணீர் கலந்து தெளிக்கவேண்டும். நெல் வயல்களில் 1% பிபிஎப்எம் தெளிக்க வேண்டும். மேலும் நைட்ரஜனை நிலைப்படுத்துவதற்கு அசோலா இட வேண்டும். |
| நிலக்கடலை | நிலக்கடலையில் பூவை தக்க வைக்கவும், நெற்று நிரப்பவும் மற்றும் வறட்சியை தாங்கும் தன்மையை அதிகரிக்கவும் விதைத்த 35 ம் நாள் ( 50 % பூக்கும் சமயத்தில்) மற்றும் 45ம் நாள் ( காய் முற்றும் பருவம் ) இரண்டு தெளிப்பாக நிலக்கடலை ரிச் எக்டருக்கு 5 கிலோ (ஒவ்வொரு தெளிப்பிற்கும் ) வீதம் தெளிக்க வேண்டும். பூப்பின் போதும், காய் உருவாதலின் போதும் 0.5 சதவிகிதம் பொட்டாசியம் குளோரைடு தெளிப்பது நீர்த்தட்டுப்பாட்டைக் குறைக்கும். தெளிப்பு நீர்ப்பாசனம் 30 சதவிகிதம் வரை நீரைச் சேமிக்க உதவுகிறது. இலேசான மண் நயமுடைய நிலங்களுக்கு பாத்தியோரப் பாசனம் பரிந்துரை செய்யப்படுகிறது. ஒரு எக்டருக்கு ஜிப்சம் 400 கிலோ வீதம் விதைத்த 45 ம் நாள் மண்ணில் இட வேண்டும் |

## தோட்டக்கலை குறிப்பிட்ட ஆலோசனை:

| தோட்டக்கலை | தோட்டக்கலை குறிப்பிட்ட ஆலோசனை |
|---|---|
| வாழை | வாழையில் வாடல் நோயை கட்டுப்படுத்த பேசில்லஸ் சப்டிலிஸ் மற்றும் ட்ரைக்கோடெர்மா விரிடி 2.5 கிலோ / எக்டர் இட வேண்டும் அல்லது பேசில்லஸ் சப்டிலிஸ் 5 மி.லி /லிட்டர் ஊற்ற வேண்டும். வாழையில் நுண்ணூட்ட சத்துக்களின் குறைபாட்டை நிவர்த்தி செய்ய மற்றும் பழத்தின் தரத்தை உயர்த்த, வாழை நட்ட 3,5 மற்றும் 7 மாதங்களில் நுண்ணூட்ட கரைசலை இலைமீது தெளிக்கவும். |
| தென்னை | தென்னையில் சுருள் வெள்ளை ஈக்களின் நடமாட்டத்தை கட்டுப்படுத்த ஏக்கருக்கு என்கார்சீயா குவாடலூபே ஒட்டுண்ணிகளை @ 100 வீதம் விட வேண்டும் அல்லது வேப்ப எண்ணெய் @ 10 மி.லி அல்லது அசாடிராக்ட்டின் 1% @5 மி.லி / லிட்டர் தெளிக்க வேண்டும் அல்லது மஞ்சள் நிற ஒட்டும் பொறிகள் (நீளம் 5 அடி x அகலம் 1.5 அடி ) ஏக்கருக்கு 10 வீதம் 6 அடி உயரத்தில் வைக்க வேண்டும். காண்டாமிருக வண்டினை கட்டுப்படுத்த ஹெக்டருக்கு 5 ரைனோ லூர் இனக்கவர்ச்சிபொறிகளை அமைக்க வேண்டும். கோடைக்காலங்களில் 1.8 மீட்டர் ஆரம் கொண்ட |

| தோட்டக்கலை | தோட்டக்கலை குறிப்பிட்ட ஆலோசனை |
|---|---|
| | வட்டப்பாத்திகளில் குவிவட்டப்பகுதி மேல் நோக்கியவாறு 100 தென்னை மட்டைகளை அல்லது 15 காய்ந்த தென்னை ஓலைகளை அல்லது 10 செ.மீ உயரத்திற்கு தென்னை நார்க்கழிவு பரப்பி மண் நீர் வளத்தைப் பாதுகாக்கலாம். தேங்காய் மட்டைகளை குழிந்த பகுதி மேல் நோக்கிய வண்ணம் வட்டப்பாத்தகளிலோ அல்லது இரு தென்னை வரிசைகளுக்கு இடைவெளிகளிலோ புதைத்து வறட்சிகளைத் தாங்க ஏற்பாடு செய்யலாம். |
| மிளகாய் | தற்பொழுது நிலவும் சூழ்நிலை காரணமாக மிளகாய் செடியில் இலைப்பேன் தாக்கம் ஏற்பட வாய்ப்புள்ளது. இதன் அறிகுறியாக பூச்சி தாக்கப்பட்ட இலைகளில் சுருக்கங்கள் ஏற்பட்டு இலைகள் மேல்நோக்கி சுருண்டு காணப்படும். எனவே இதனை கட்டுப்படுத்த பைப்ரினில் 1.5 மி.லி/ லிட்டர் தெளிக்க வேண்டும். |
| மாம்பழம் | என்.ஏ.ஏ என்ற வளர்ச்சி ஊக்கி மருந்தை 20 பி.பி.எம் என்ற அளவில் இரண்டு முறை தெளிக்க வேண்டும். இவ்வாறு தெளிப்பதால் மாவில் பிஞ்சுகள் உதிர்வது தடுக்கப்பட்டு காய்ப்பிடிப்பு அதிகரிக்கும்.பிப்ரவரி மாதத்தில் பூ பூக்காத மரங்களுக்கு 0.5% யூரியா கரைசல் (5கி/ லிட்டர் ) அல்லது 1% பொட்டாசியம் நைட்ரேட் (10 கி / லிட்டர் ) கரைசல் தெளிக்க வேண்டும். |

## உயிருள்ள விலங்குகள் குறிப்பிட்ட ஆலோசனை:

| உயிருள்ள விலங்குகள் | உயிருள்ள விலங்குகள் குறிப்பிட்ட ஆலோசனை |
|---|---|
| பசு | கால்நடைகளை கொட்டிலில் அடைத்து கொட்டிலை சுற்றிலும் படுதா கட்டி குளிர்காற்று வீசுவதை தடுக்க வேண்டும். உடல் வெப்பநிலையை சமாளிக்க புண்ணாக்குடன் 100 கிராம் வெல்லம் சேர்த்து குடிநீரில் தர வேண்டும். தாது உப்பு கலவை ஒரு பசுமாட்டிற்கு 30 கிராம் வீதம் குடிநீரில் தர வேண்டும். |
| வெள்ளாடு | திரவ ஆக்சிகுளோக்சனைடு மருந்தை 5 மி.கி / ஒரு கிலோ உயிர் எடை வீதம் சினையில்லா ஆடுகளுக்கு கொடுத்து குடற்புழு நீக்கம் செய்ய வேண்டும். பி.பி.ஆர் மற்றும் துள்ளுமாரி நோய்களுக்கு தடுப்பூசி போட வேண்டும். சளி இருப்பின் சலபாடிமிடின் 5 கிராம் மாத்திரையை பெரிய ஆடுகளுக்கு ஒன்றும், நடுத்தர குட்டிகளுக்கு பாதியளவும் மூன்று நாட்களுக்கு தர வேண்டும். |

## கோழிப்பண்ணை குறிப்பிட்ட ஆலோசனை:

| கோழிப்பண்ணை | கோழிப்பண்ணை குறிப்பிட்ட ஆலோசனை |
|---|---|
| கோழி | கோழிக்குஞ்சுகளுக்கு ஒரு மாத வயது வரை புரூடிங் வெப்பம் பானை அல்லது மின்சார பல்பு மூலம் மாலை 7 மணி முதல் காலை 8 மணிவரை தர வேண்டும். இரவு மற்றும் காலை வேளைகளில் வெதுவெதுப்பான சூடான குடிநீரை அளிக்க வேண்டும். சளி இருப்பின் நியோடாக்ஸ் போர்ட் என்ற மருந்தை ஒரு கிராம் வீதம் இரண்டு லிட்டர் குடிநீருடன் கலந்து கொடுக்க வேண்டும். |